

ஸ்மார்ட் சைக்கிள்!




விமான நிலையம் சுவர் ஓவியம்

# மாறி வரும் சென்னை முகம் 1


நடைமேடை : பேட்டரிகார்


பாண்டி பஜார்

வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேறி வரும் நகரங்களில் ஒன்று சென்னை. இதனால் சென்னையின் முகமும் சமீபகாலமாக மாறியுள்ளது. அவற்றிற்கு உதாரணம் தான் மெட்ரோ ரயில், ஸ்மார்ட் சிட்டி, ஸ்மார்ட் பைக். அவற்றை பற்றி சிறு அலசல் இதோ:

### சென்னை மெட்ரோ

2015–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மெட்ரோ ரயில் சேவை சென்னையின் அதிவேக வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.

சென்னை மின்சார ரயிலின் தேவை எந்த அளவிற்கு உள்ளதோ அந்த அளவிற்கு மெட்ரோ ரயிலின் சேவையும் முக்கியமான தேவையாக மாறிவிட்டது.

சென்னையின் இரு வழித்தடங்களில் இயங்கும் மெட்ரோ ரயில் சேவையால் சென்னை விமான நிலையம், சென்ட்ரல் ரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் இணைப்பு வசதி ஏற்படுத்தப்பட்டு பயணிகளின் நேரச் செலவு குறைந்துள்ளது.

ஆரம்பத்தில் கட்டணம் அதிகம் என பயணம் செய்ய தயங்கியவர்கள் அதிகம். ஆனால் இப்போது நேரத்தை மிச்ச படுத்தும் நோக்கத்தில் மெட்ரோ ரயில் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருவது தெரிகிறது. மாதந்தோறும் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மெட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

### ஸ்மார்ட் சிட்டி

சென்னையின் முக்கிய வணிக பகுதிகளில் தியாகராய நகர், பாண்டி பஜார். இங்கு குண்டூசி முதல் குளிர்சாதன பெட்டி வரை அனைத்தும் கிடைக்கும் என்பதால் எப்போதும் பரபரப்பாகவே காணப்படும். சனி, ஞாயிறு என்றால் கேட்கவே வேண்டாம். வாடிக்கையாளர்களின் வாகனங்கள் சாலையோரங்களிலேயே நிறுத்தப்படுவதால், போக்குவரத்து நெரிசலில் இந்த பகுதி சிக்கி தவித்தது

ஸ்மார்ட் சிட்டி பட்டியலில் சென்னை தேர்வாகி இருந்த நிலையில், பாண்டிபஜார் சீரமைக்கப்பட்டது. 40 கோடி ரூபாய் செலவில் சாலையின் இருமருங்கிலும் நடைபாதை வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. நடைபாதையின் இருபுறங்களிலும் எல்இடி விளக்குகள், மரங்களில் ஒளிரும் இரவு விளக்குகள், வண்ண வண்ண இருக்கைகள், சாலையோர சுவர்களில் வண்ணமயமான ஓவியங்கள், புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது பாண்டிபஜார்.

மேலும் பாதசாரிகளுக்காக தனி வளாகம், அமர்வதற்கான இடம், முதியோர், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகளுக்காக பேட்டரி கார், பேருந்துகள் மற்றும் இருசக்கர வாகனங்களுக்காக தனிப் பாதை என வடிவமைக்கப்பட்டுள்ளது. கார் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்த பல அடுக்கு நிறுத்தம் வரையில் திறக்கப்பட இருக்கிறது. விசேஷ நாட்களில் மாலை நேரம் ஆங்காங்கே நவீனமாக இசை நிகழ்வுகள் நடைபாதை நிகழ்வாக நடைபெறுகின்றன.

பாண்டிபஜார் தற்போது வெளிநாட்டு நகரங்களை போல காட்சியளிப்பதாக பொதுமக்கள் சொல்கிறார்கள்.

### சுவர்களில் ஓவியங்கள்

மீனம்பாக்கம் விமான நிலையம் பல அதிரடியான மாற்றங்களை அடைந்து வருகிறது. மீனம்பாக்கம் விமானநிலைய சுற்றுச் சுவர்களில் இப்போது அழகழகான ஓவியங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. ஏறக்குறைய விமான நிலைய சுவரைச் சுற்றி அதிகமான சுவர் ஓவியங்களை வரையும் பணி நிறைவை எட்டி உள்ளது.

தமிழகக் கலாசாரத்தை எடுத்துக்காட்டும் வகையில், தஞ்சை கோபுரம், சென்னைப் பல்கலைக்கழகம், நாட்டுப்புறக் கலைஞர்கள், திருவள்ளுவர், பாரதி என வகை வகையான 400 ஓவியங்கள் பார்வையாளர்களை கவரும்படி உள்ளன. இந்த ஓவியங்களால் சுற்றுபுறச் சுவர் மிகவும் தூய்மையாக மிளிர ஆரம்பித்துள்ளன.

### ஸ்மார்ட் பைக்!

டெல்லி, ஐதராபாத், அமராவதி போன்ற பெருநகரங்களில் வெற்றிகரமாக செயல்பாட்டில் உள்ள இந்தத் திட்டம் தற்போது சென்னையிலும் துவங்கப்பட்டு மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

முதல் கட்டமாக சென்னையில் மக்கள் அதிகம் கூடும் முக்கிய இடங்களில் சைக்கிள்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த சேவையானது விரைவில் 500 இடங்களில் தொடர உள்ளது.

மிகக் குறைந்த கட்டணத்தில், சென்னையின் எந்தப் பகுதியில் இருந்தும் இன்னொரு பகுதிக்கு இதில் பயணிக்கலாம்.

சென்னையில் மக்கள் அதிகம் கூடும் முக்கிய இடங்களில் இந்த சைக்கிள் மையங்கள் அமைக்கப்பட்டிருக்கும், அதில் எந்த மையத்தில் இருந்தும் சைக்கிளை எடுத்து பயன்படுத்திக்கொண்டு, எந்த மையத்திலும் நிறுத்திக் கொள்ளலாம்.

முதல் ஒரு மணி நேரத்திற்கு வெறும் 5 ரூபாயும், அடுத்த அரை மணி நேரத்திற்கு 9 ரூபாயும் டிஜிட்டல் முறையில் கட்டணமாக வசூலிக்கபடும்.

ஜிபி எஸ் இணைப்பு, கியர் வசதி என அசத்தலான வடிவமைப்பில் வந்துள்ளது இந்த ஸ்மார்ட் பைக்.

ஸ்மார்ட் பைக் மோபிலிட்டி (smart bike mobility) என்ற மொபைல் ஆப்பின் மூலம் இந்த ஸ்மார்ட் பைக்கின் இருப்பிடம் மற்றும் செயல்பாடுகளைத் தெரிந்துகொள்ளலாம். காலை மற்றும் மாலை நேரங்களில் பொதுமக்கள் அதிக அளவில் சைக்கிள் பயன்படுத்தி வருகின்றனர்.

அடுத்த இதழிலிலும்...

தொகுப்பு : ராஜன்